**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி : 29.04.2024** **நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

- அரசியல் சாசனத்தை திருத்தவோ, அல்லது, இட ஒதுக்கீட்டிற்கு முடிவு கட்டவோ, எவராலும் முடியாது என்று பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- பண வீக்கம் மற்றும் வேலை வாய்ப்பின்மை அதிகமானதற்கு, மத்தியில் உள்ள பிஜேபி அரசுதான் காரணம் என்று, மூத்த காங்கிரஸ் தலைவர் திரு ராகுல்காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.
- பல்வேறு மாநிலங்களின், ஃப்ளு காய்ச்சல் நிலவரங்களை, மத்திய அரசு, நிகழ்நேர அடிப்படையில் கண்காணித்து வருகிறது.
- அடுத்த 5 நாட்களுக்கு, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் வெயில் குறைய, வாய்ப்பு குறைவு என்று, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மோடி பிரச்சாரம் 1 (16)

அரசியல் சாசனத்தை திருத்தவோ, அல்லது, இட ஒதுக்கீட்டிற்கு முடிவு கட்டவோ, எவராலும் முடியாது என்று பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். 3 ஆம் கட்ட மக்களவை தேர்தலின் ஒரு பகுதியாக மே 7 ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள

மகராஷ்டிர மாநிலம் சோலாப்பூர் தொகுதியில் இன்று, தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், இடஒதுக்கீடு ரத்து செய்யப்படலாம் என்பது எதிர்கட்சிகளின் பொய் பிரச்சாரம் என்றார்.

தமது அரசு யாருடைய உரிமைகளையும் பறிக்காமல் ஏழைகளுக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கி இருப்பதாக பிரதமர் தெரிவித்தார். மருத்துவ தேர்வுகளில் இதர பிற்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதாகவும், மராத்தி உள்ளிட்ட இந்திய மொழிகளில் மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்புகள் கற்றுத் தரப்படுவதாகவும் அவர் கூறினார். நாட்டின் ஒவ்வொரு கிராமத்திலும், நலிவடைந்த ஒவ்வொரு குடும்பத்தையும் சென்றடையும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை தேசிய ஜனநாயக கூட்டணி அரசு செயல்படுத்தி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

மோடி பிரச்சாரம் 2 (17)

முன்னதாக, கர்நாடக மாநிலம் பாகல்கோட் தொகுதியில் இன்று, தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டம் ஒன்றில் திரு நரேந்திர மோடி பேசுகையில், நாடு முழுவதும் 18 ஆயிரம் கிராமங்களுக்கு மின்சார வசதி

வழங்கப்பட்டுள்ளதாகவும், பிரதமரின் ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ், 4 கோடி வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளதாகவும் கூறினார். நாட்டில், குழாய் இணைப்பு மூலம் குடிநீர் வழங்கப் பெறும் வீடுகளின் எண்ணிக்கை 11 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளதாகவும், உஜ்வாலா திட்டத்தின் கீழ் இலவச கியாஸ் இணைப்பு வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். நாடு முழுவதும் 55 கோடி பேருக்கு வங்கி கணக்கு தொடங்கப் பட்டுள்ளதையும் அவர் சுட்டிக் காட்டினார். காங்கிரஸ் ஓட்டு வங்கி அரசியலில் ஈடுபட்டுள்ள நிலையில், பிஜேபி தான் வளர்ச்சிக்கு பாடுபடுவதாக அவர் கூறினார். 2047 ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்த, இரவு-பகல் 24 மணி நேரமும் தாம் உழைத்து வருவதாக திரு நரேந்திர மோடி மேலும் குறிப்பிட்டார். தொடர்ந்து, சத்தாரா மற்றும் புனேவிலும், பிரச்சார பொதுக் கூட்டங்களில் அவர் உரையாற்றுகிறார்.

*ராகுல்காந்தி* (12)

நாட்டில் பண வீக்கம் மற்றும் வேலை வாய்ப்பின்மை அதிகமானதற்கு மத்தியில் உள்ள பிஜேபி அரசுதான் காரணம் என்று மூத்த காங்கிரஸ் தலைவர் திரு ராகுல்காந்தி குற்றம் சாட்டியுள்ளார். இன்று வடக்கு

குஜராத்தின் பத்தான் மக்களவை தொகுதியில் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், கார்ப்பரேட் நிறுவனங்களின் பல கோடி ரூபாய் கடன்களை ரத்து செய்த அரசு விவசாயிகள், பழங்குடியினர் மற்றும் தொழிலாளர்களுக்கு அநீதி இழைப்பதாக கூறினார். நாட்டின் 40 சதவிகித செல்வம், 1 சதவிகித பணக்காரர்களின் கையில் குவிந்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், விவசாயிகளின் கடன்களை ரத்து செய்யும் என்றும், பல்வேறு சமூகங்களுக்கு கிடைக்கும் பிரதிநிதித்துவத்தை மதிப்பிடும் வகையில் ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்றும் திரு ராகுல்காந்தி தெரிவித்தார்.

*அமித் ஷா* (11)

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, ஏழைகள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு உரிய மரியாதை அளித்திருப்பதாக மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு அமித் ஷா கூறியுள்ளார். இன்று பீகார் மாநிலம் ஜஞ்ஜர்பூர் மக்களவை தொகுதியில் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், முன்னாள் பீகார் முதலமைச்சர் ஜனநாயக்

கர்ப்பூரி தாக்கூருக்கு பாரத் ரத்னா விருது வழங்கியது மோடி அரசு தான் என்றார். நாட்டில் ஊழல் மற்றும் ஜாதியவாதத்தை பிரதமர் திரு நரேந்திர மோடித்தான் முற்றிலுமாக ஒழிக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார். திரு அமித் ஷா இன்று பீகாரில் பேகுசராய் மக்களவை தொகுதியிலும் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

*ராஜ்நாத்* (11)

மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ராஜ்நாத் சிங் இன்று உத்திரபிரதேஷ் மாநிலம் லக்னோ மக்களவை தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்தார். உத்திரபிரதேஷ் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் வேட்பு மனு தாக்கலின் போது உடனிருந்தனர். திரு ராஜ்நாத் சிங் 3 ஆவது முறையாக லக்னோ தொகுதியில் இருந்து மக்களவைக்கு போட்டியிடுகிறார். இதற்கிடையே, மற்றொரு மத்திய அமைச்சர் திருமதி ஸ்மிருதி இரானி உத்திரபிரதேஷ் மாநிலம் அமேதி தொகுதியில் இன்று தமது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். கடந்த 2019 ஆம் ஆண்டு மக்களவை தேர்தலின் போது, இதே தொகுதியில், மூத்த காங்கிரஸ் தலைவர் திரு ராகுல்காந்தியை தோற்கடித்தவர் திருமதி ஸ்மிருதி இரானி என்பதும் குறிப்பிடத் தக்கது.

நான்காம் கட்டம் (10)

9 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தை சேர்ந்த 96 தொகுதிகளில் அடுத்த மாதம் 13 ஆம் தேதி நடைபெற உள்ள, 4 ஆம் கட்ட மக்களவை தேர்தலில், வேட்பு மனுக்களை விலக்கிக் கொள்வதற்கான அவகாசம் இன்றுடன் முடிவுக்கு வந்துள்ளது. இறுதியாக களத்தில் உள்ள வேட்பாளர்கள் பற்றிய எண்ணிக்கை விவரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. நான்காம் கட்ட மக்களவை தேர்தலுக்கான 96 தொகுதிகளில், ஆந்திர மாநிலத்தின் அனைத்து 25 தொகுதிகளும், தெலங்கானாவில் 17, உத்திரபிரதேசத்தில் 13, மகாராஷ்டிராவில் 11, மத்திய பிரதேஷ் மற்றும் மேற்கு வங்கத்தில் தலா 8, பீகாரில் 5, ஜார்கண்ட் மற்றும் ஒடிசாவில் தலா 4 தொகுதிகளும், ஜம்மு காஷ்மீரின் ஒரு தொகுதியும் அடங்கும்.

ஃப்ளு காய்ச்சல் (11)

பல்வேறு மாநிலங்களின், பருவ கால ஃப்ளு காய்ச்சல் நிலவரங்களை மத்திய அரசு, நிகழ்நேர அடிப்படையில் கண்காணித்து வருகிறது.

அமெரிக்காவில் கால்நடைகளுக்கு பறவைக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியானதை தொடர்ந்து, மத்திய சுகாதார அமைச்சகம், உள்நாட்டு நிலவரங்கள் குறித்து, பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுடன் மறு ஆய்வுக் கூட்டம் ஒன்றை நடத்தியது. நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் தற்போது ஃப்ளு காய்ச்சல் அபாயகரமான அளவில் அதிகரிக்கவில்லை என்றும், பாலைக் காய்ச்சி குடித்தல், இறைச்சியை நன்கு வேகவைத்து உண்ணுதல் போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் ஃப்ளு வைரஸ் பரவலை திறம்பட்ட முறையில் தடுக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுரங்கத் துறை (14)

பொருளாதார வளர்ச்சி மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு தேவையான முக்கிய கனிமங்களை, தாது உப்புகளில் இருந்து பிரித்து எடுக்கும் துறையில், ஒத்துழைப்பு, அறிவுப் பகிர்வு மற்றும் புதுமையாக்க முயற்சிகளை ஊக்குவிப்பது குறித்து, மத்திய சுரங்கத் துறை அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 2 நாள் உச்சி மாநாடு, புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது. சுரங்கத் துறை செயலர் திரு வி எல் காந்தாராவ் இம்மாநாட்டில் பேசுகையில், இந்தியாவில் பொருளாதார வளர்ச்சியும், தூய எரிபொருளின்

தேவையும் அதிகரித்து வருவதன் பின்னணியில் இம்மாநாடு முக்கியத்துவம் பெருவதாக கூறினார். முக்கியக் கனிமங்களின் 20 படிவுப் பகுதிகள் கடந்த ஆண்டு நவம்பர் ஏலம் விடப்பட்டதை அவர் சுட்டிக் காட்டி, ஏல நடவடிக்கைகள் எதிர்காலத்திலும் தொடரும் என்றார். நிலத்தில் இருந்தும், கடலில் இருந்தும் அகழ்ந்து எடுக்கப்படும் முக்கிய கனிமங்களின் கண்காட்சி ஒன்றும் இம்மாநாட்டில் இடம் பெற்றுள்ளது.

*பாரதிதாசன்* (4)

பாவேந்தர் பாரதிதாசனார் பிறந்த நாள் இன்று புதுச்சேரியில் அரசு சார்பில் கொண்டாடப்பட்டது. பாரதி பூங்காவில் அமைந்துள்ள பாரதிதாசனார் சிலைக்கு, செய்தி-விளம்பரத் துறை இயக்குநர் திரு தமிழ்ச் செல்வன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

*வெப்ப அலை*(16)

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு, அதிகபட்ச வெப்ப நிலையில், பெரிய மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவு என்று சென்னை வானிலை ஆய்வு மையம்

தெரிவித்துள்ளது. வடதமிழக உள்மாவட்டங்களின் சமவெளிப் பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு வெப்ப நிலை, இயல்பை விட 3 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை அதிகமாக பதிவாகும் என்றும், மே 2-3 ஆகிய தேதிகளில் வட தமிழகத்தின் உள்மாவட்டங்களில் வெப்ப அலை வீசக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெப்பநிலையில் ஈரப்பதமும் அதிகமாக இருக்கும் போது ஓரிரு இடங்களில் அசௌகரியம் ஏற்படலாம் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம் மட்டுமின்றி, ஆந்திரா, தெலங்கானா, ராயலசீமா, வடக்கு உட்புற கர்நாடகா மற்றும் கேரளத்தில், வெப்ப அலை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒடிசா, மேற்கு வங்கம், ஜார்கண்ட் மற்றும் பீகாரில் தீவிர வெப்ப அலை வீசும் என்றும், அதிகபட்ச வெப்ப நிலை 1 முதல் 2 டிகிரி வரை அதிகரித்து, மாற்றம் இன்றி நீடிக்கலாம் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மாவோயிஸ்டுகள் (8)*

சட்டீஸ்கர் மாநிலம் பஸ்தார் கோட்டத்திற்கு உட்பட்ட கிஸ்தாராம் வனப் பகுதியில் இன்று பாதுகாப்பு படையினர், ஒரு மாவோயிஸ்டு தீவிரவாதியை என்கவுண்டரில் சுட்டுக் கொன்றனர். இப்பகுதியில்

மாவோயிஸ்ட் நடமாட்டம் இருப்பதாக தகவல் கிடைத்ததை தொடர்ந்து, கூட்டு பாதுகாப்பு படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட போது, மோதல் ஏற்பட்டது. சுட்டுக் கொல்லப்பட்ட மாவோயிஸ்ட் தீவிரவாதி உடலையும், பல்வேறு ஆயுதங்களையும், மோதல் நடந்த இடத்தில் இருந்து, பாதுகாப்பு படையினர் கைப்பற்றி உள்ளனர்.

*அமித் ஷா வீடியோ* (7)

மத்திய அமைச்சரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு அமித் ஷாவின் தேர்தல் உரை ஒன்றை திரித்திக் காட்டும் வகையில், சமூக ஊடகங்களில் போலி வீடியோ உலா வருவது குறித்து டெல்லி போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். இத்தகைய வீடியோக்களால் சமூகங்களுக்கு இடையே நல்லிணக்கம் பாதிக்கப்பட்டு பொது அமைதி குலையும் என்று சைபர் குற்றங்கள் பற்றிய இந்திய ஒருங்கிணைப்பு மையம் தாக்கல் செய்த புகார் மீது போலீசார் இவ்வாறு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

*ஜெய்சங்கர் (9)*

இந்திய பொருளாதாரத்தில், இன்னும் பயன்படுத்தப்படாத உள்ளாற்றல் அதிகம் இருப்பதாக, வெளியுறவு அமைச்சர டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார். வடகிழக்கு இந்தியாவை, தென்கிழக்கு ஆசியா மற்றும் ஜப்பானுடன் ஒருங்கிணைப்பது குறித்து, டெல்லி பல்கலைக்கழக கல்லூரியில் இன்று நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். பல்வேறு பிராந்தியங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காகவே ஜி 20 உச்சி மாநாட்டை இந்தியா நடத்தியதாகவும், ராஜீயத் துறை ரீதியிலான உலக நாடுகளின் கவனத்தை இந்தியா மீது ஈர்க்க இம்மாநாடு பெரிய அளவில் உதவி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

அரசியல் சாசனத்தை திருத்தவோ, அல்லது, இட ஒதுக்கீட்டிற்கு முடிவு கட்டவோ, எவராலும் முடியாது என்று பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பண வீக்கம் மற்றும் வேலை வாய்ப்பின்மை அதிகமானதற்கு, மத்தியில் உள்ள பிஜேபி அரசுதான் காரணம் என்று, மூத்த காங்கிரஸ் தலைவர் திரு ராகுல்காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

பல்வேறு மாநிலங்களின், ஃப்ளு காய்ச்சல் நிலவரங்களை, மத்திய அரசு, நிகழ்நேர அடிப்படையில் கண்காணித்து வருகிறது.

அடுத்த 5 நாட்களுக்கு, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் வெயில் குறைய, வாய்ப்பு குறைவு என்று, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.